TNVR090002072022

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

முன்னிலை திரு. R.V. ராஜகுமார், பி.எல்.

சார்பு நீதிபதி, விருதுநகர்.

2023 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ம் நாள் வியாழக்கிழமை

இந்து திருமண முதலேற்பு மனு 51/2022

----

P. சுவாதி .... மனுதாரர்

/எதிர்/

S. முத்துப்பாண்டி ..... எதிர்மனுதாரர்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தில் இன்று (13.04.2023) இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.பழனிச்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சரவணக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்வதற்கு போதிய காலஅவகாசம் அளித்தும் தாக்கல் செய்யாத நிலையில் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் எதிர்மனுதாரர் ஒருதரப்பாக்கப்பட்ட நிலையில், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

**<u>உத்தரவு</u>**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 08.09.2019 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிட வேண்டி மனுதாரர் இந்த மனுவை இந்து திருமணச்சட்டம் 1955 பிரிவு 13(1)(i-a)ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. மனுவின் சுருக்கம் –</u>**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 08.09.2019 ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது மனுதாரருக்கு மனுதாரரின் பெற்றோர் சுமார் 20 பவுன் தங்க நகைகளும் எதிர்மனுதாரருக்கு 5 பவுன் தங்க நகைகளும் வாட்ச்–ம் அணிவித்தனர். மேலும் எதிர்மனுதாரர் கேட்டுக் கொண்டதன் பேரில் ரொக்கமாக ரூ.1,00,000/– எதிர்மனுதாரருக்கு இரு சக்கர வாகனம் வாங்குவதற்கென்று வரதட்சணையாக எதிர்மனுதாரர் வசம் வழங்கினார்கள். திருமணம் முடிந்த பின்பு மனுதாரரும் எதிர்மனுதாரரும் தங்களது இல்லற வாழ்க்கையை எதிர்மனுதாரரின் வீட்டில் எதிர்மனுதாரரின் தாயாருடன் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தனர். திருமணம் முடிந்த நான்கு நாட்கள் மட்டுமே சந்தோஷமாக இல்லறம் நடத்தினார். அதன்பிறகு மனுதாரர் எதிர்மனுதாரரை மனைவி என்ற முறையில் சந்தோஷமாக வீட்டை விட்டு வெளியில் எங்கும் அழைத்துச் செல்லாமலும் ஒரு கைதியைப்போல வீட்டினுள் அடைத்து வைத்தும் சித்ரவதை செய்து வந்தார். எதிர்மனுதாரர் டிரைவராக பணிபுரிந்து வந்ததால் அவர் பணி நிமித்தமாக வெளியூருக்கு சென்றாலும் மனுதாரரை வீட்டில் வைத்து பூட்டி விட்டு செல்வதை

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

வாடிக்கையாக கொண்டிருந்தார். மேலும் மனுதாரரை ஒரே ஊரில் இருக்கும் அவரது தாயாரையோ, தாத்தா பாட்டியோ பார்ப்பதற்குக்கூட எதிர்மனுதாரர் அனுமதிப்பது கிடையாது. எதிர்மனுதாரர், மனுதாரரை வீட்டிற்குள்ளே வைத்து அடித்தும், கடித்தும், சிகரெட் சூடு வைத்தும் கொடுமைகள் செய்துள்ளார். ஆனால் அந்த சம்பவங்கள் குறித்து மனுதாரரை அவரது தாயாரிடமோ, உறவினர்களிடமோ ஏதும் தெரிவிக்க கூடாது என எதிர்மனுதாரர் மிரட்டியதால், மனுதாரர் அது பற்றி அவரது தாயார் மற்றும் உறவினர்களிடம் கூட ஏதும் தெரிவிக்கவில்லை. எதிர்மனுதாரரின் உடன்பிறந்த சகோதரி பாண்டிச்செல்வி என்பவர் திருமணம் முடிந்து செவலூரில் வசித்து வரும் நிலையில் அவரது அவர் அடிக்கடி மனுதாரர், எதிர்மனுதாரர் வாழும் வீட்டிற்கு வந்து மனுதாரரை பல வழிகளில் கொடுமைகள் செய்தும், தனது கால்களை கழுவி விடுமாறும் அவர்கள் துணிகளை துவைத்து காயப்போட்டு எடுத்து தருமாறும் கூறி கொடுமைகள் செய்துள்ளார்.

மேலும் எதிர்மனுதாரர் தன் வீட்டில் நடக்கும் கொடுமைகள் குறித்து மனுதாரரை அவரது அம்மா, தாத்தா, பாட்டியிடம் ஏதும் கூறக்கூடாது என்றும், அதனை மீறி கூறும் பட்சத்தில் தலையணையை வைத்து முகத்தில் அமுக்கி மனுதாரரை கொன்று விடுவதாக மனுதாரரை மிரட்டி வந்துள்ளார். அதற்கு பயந்து அவரது தாயரிடமோ, தாத்தா, பாட்டியிடமோ ஏதும் தெரிவிக்காமல் இருந்து விட்டார். மனுதாரரை அவரது பெற்றோரை சந்திக்க விடாமல் வீட்டிற்குள்ளே கைதியை போல் எதுவும் அடைத்து வைத்திருந்த நிலையில் மனுதாரரை சந்திப்பதற்கு அவரது தகப்பனார் மற்றும் தாயார் வந்தாலும் கூட எதிர்மனுதாரர் அவர்களை வீட்டிற்கு வெளியே வைத்தே மனம் நோக பேசி மனுதாரரை பார்க்கவிடாமலேயே

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

திருப்பி அனுப்பி விடுவார். இதனால் மனமுடைந்து மனுதாரர் தகப்பனார் பரமகுரு மகள் படும் சித்ரவதையை எண்ணி எண்ணி வேதனையில் மனம் நொந்து இறந்து விட்டார். எதிர்மனுதாரர் தன்னை கொடுமைப்படுத்தும் குணத்தில் இருந்து இன்று அல்லது நாளை திருந்தி விடுவார் என மனுதாரர் எண்ணியிருந்த நிலையில் நாளுக்கு நாள் எதிர்மனுதாரரின் கொடுமைகள் அதிகரித்துக் கொண்டே சென்று மனுதாருக்கு ஏமாற்றம் மட்டுமே மிஞ்சியது. எதிர்மனுதாரர் மனுதாரரை கொடுமைகள் செய்து குறித்து எதிர்மனுதாரரின் பக்கத்து வீட்டுக்காரர்கள் கூறியதை கேள்விப்பட்டு மிகுந்த மன வேதனை அடைந்த மனுதாரரின் தாயார் சிவகாசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது புகார் செய்தார். புகார் மனுவின் விசாரணைக்கு மனுதாரரையும், எதிர்மனுதாரரையும் காவல்துறையினர் அழைத்தபோது எதிர்மனுதாரர் மனுதாரரை அவரது தாயருக்கு எதிராக காவல் நிலையத்தில் வாக்குமூலம் கொடுக்குமாறும் மிரட்டினார். எதிர்மனுதாரர் மிரட்டலுக்கு பயந்து மனுதாரர் காவல் நிலைய விசாரணையில் எதிர்மனுதாரர் தன்னை கொடுமை செய்யவில்லை என்றும், ஏதேனும் விசேஷங்களுக்கு மட்டும் தனது தாயார் வீட்டிற்கு தான் வருவேன் என்றும் காவல் நிலையத்தில் எழுதி கொடுத்துவிட்டார். அதன் அடிப்படையில் காவல் நிலையத்தில் புகார் மனு முடிக்கப்பட்டு விட்டது.

எதிர்மனுதாரர் மீது மனுதாரரின் தாயார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததால் ஆத்திரம் அடைந்த எதிர்மனுதாரர் மனுதாரர் அனுப்புவது போல் மனுதாரரின் பெயரை குறிப்பிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றினை மனுதாரரின் தாயாருக்கும், தாத்தா, பாட்டிக்கும் அனுப்பினார். அதில் மனுதாரரை, எதிர்மனுதாரர் நல்ல முறையில் பார்த்துக்கொள்வதாகவும்,

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

மனதாரரது பெற்றோர் எதிர்மனுதாரர் மீது தவறாக காவல் நிலையத்தில் பொய்யான சங்கதிகள் கூறி புகார் கொடுத்ததாகவும் அதனால் எதிர்மனுதாரர் வாழ்க்கையில் மனுதாரரின் தாயாரோ, தாத்தா, பாட்டியோ தலையிடக்கூடாது என்றும் காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கக் கூடாது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஷை அறிவிப்பு மனுதாரருக்கு தெரியாமல் எதிர்மனுதாரரால் அனுப்பப்பட்டதாகும். எதிர்மனுதாரர் ஒழுங்காக வேலைக்கு செல்லாமல் கையில் கிடைக்கும் பணத்தை எல்லாம் ஊதாரித்தனமாக செலவு செய்து விட்டு மனுதாரரின் அடிப்படை செலவிற்கே பணம் கொடுக்காமல் இருந்து வந்தார். இந்நிலையில் மனுதாரருக்கு திருமணத்தின் போது அவரது பெற்றோர் அணிவித்த நகைகள் அனைத்தையும் மனுதாரிடம் இருந்து வலுக்கட்டாயமாக வாங்கி அடமானம் வைத்து அந்த பணம் முழுவதையும் எதிர்மனுதாரர் குடித்து கும்மாளம் அடித்து செலவு செய்து விட்டார். நாளது தேதிவரை அடமானத்தில் உள்ள நகைகளை எதிர்மனுதாரர் மீட்கவில்லை. மேலும் எதிர்மனுதாரருக்கு பணம் தேவைப்பட்டதால் மனுதாரர் ஏமாற்றி ஆசைவார்த்தைகள் கூறி மனுதாரரின் தாயாரிடம் கூடுதல் வரதட்சணை வாங்கி வருமாறு மனுதாரரை எதிர்மனுதாரர் வற்புறுத்தியுள்ளார்.

அதன் விளைவாக சுமார் 20 நாட்கள் மனுதாரர் தாயார் வீட்டில் மனுதாரருடன், எதிர்மனுதாரர் தங்கி இருந்து மனுதாரரின் தாயாரையும் ஏமாற்றி கூடுதல் வரதட்சணையாக ரூ.50,000/- அவரிடம் இருந்து பெற்றுக்கொண்டு அன்றைய தினமே மனுதாரரை அழைத்துக் கொண்டு அவரது வீட்டிற்கு சென்றுவிட்டார். அதன்பின் மனுதாரரை அவரது தாயாரை சந்திப்பதற்கு எதிர்மனுதாரர் அனுமதிக்கவில்லை. மனுதாரர் கர்ப்பம் தரித்த நிலையில் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு உரிய

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

மருத்துவச்சிகிச்சை ஏதும் வழங்கவில்லை. மனுதாரருக்கு அவரது தாயார் முறையாக செய்ய வேண்டிய வளைகாப்பு நிகழ்ச்சியை நடத்துவதற்கு மனுதாரரின் தாயார் அனுமதி கூறியதற்கு எதிர்மனுதாரர் மனுதாரரின் தாயார் வளைகாப்பு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்காமல் தானே அவரது வீட்டில் வைத்து வளைகாப்பு நடத்திக் கொள்வதாக கூறிவிட்டு வளைகாப்பு நிகழ்ச்சி நடத்தாமல் விட்டுவிட்டார். இதனால் மனுதாரரின் தாயார் மற்றும் உறவினர்கள் துயரம் அடைந்தனர். நாளுக்கு நாள் எதிர்மனுதாரரின் கொடுமைகள் அதிகரித்துக் கொண்டே வந்தது. மனுதாரர் நிறைமாத கர்ப்பிணையாக இருந்த நிலையில் எதிர்மனுதாரர், மனுதாரரிடம் சண்டையிட்டு மனுதாரரை அடித்து, வயிற்றில் உதைத்து, மனுதாரரின் தலைமுடியை பிடித்து கீழே தள்ளி பரபரவேன தரையில் இழுத்து சென்றுள்ளார். மனுதாரர் மண்டை வலிக்குது என்று கூறிக்கொண்டு உதட்டில் ரத்த காயத்துடன் வீட்டை விட்டு வெளியே ஓடிச் சென்று எதிர்மனுதாரர் வீட்டின் அருகில் இருந்து ஒரு பாட்டியின் வீட்டில் என்னை காப்பாற்றுங்கள் என்று தஞ்சம் புகுந்துள்ளார்.

பினபு மனுதாரரை எதிர்மனுதாரிடம் இருந்து காப்பாற்றி காயமடைந்த மனுதாரரை சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனையில் சேர்க்க ஏற்பாடு செய்துள்ளார். மனுதாரர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்த பின் தகவல் அறிந்து மனுதாரரின் தாயாரும், தாத்தா, பாட்டியும் மருத்துவமனை சென்று மனுதாரருக்கு நடந்த கொடுமை குறித்து அறிந்து கொண்டனர். மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட மனுதாரருக்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு இன்னும் பெயர் சூட்டப்படவில்லை. குழந்தை பிறந்த விவரத்தை எதிர்மனுதாரருக்கு குடும்பத்தினர் முறையாக தகவல் தெரிவித்தும் எதிர்மனுதாரர்

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

குழந்தையை பார்க்க வரவில்லை. எதிர்மனுதாரர், மனுதாரரை தாக்கியது சம்மந்தமாக எதிர்மனுதாரர் மீது மனுதாரர் காவல்துறை மூலமாக நடவடிக்கை எடுக்க உள்ளார். இனியும் சேர்ந்து வாழும் பட்சத்தில் அது மனுதாரரின் உயிருக்கும் அவர் பெற்ற குழந்தையின் உயிருக்கும் ஆபத்தாக முடிய கூடும். மனுதாரர், எதிர்மனுதாரர் இடையேயான திருமண உறவு எதிர்மனுதாரரின் கொடுமைகளினால் முற்றிலும் முறிந்து விட்டது. மனுதாரரும் எதிர்மனுதாரரும் இனியும் சேர்ந்து வாழ்வது உகந்தது அல்ல என்ற நியாயமான சூழ்நிலையிலும், எதிர்மனுதாரருடன் மனுதாரர் சேர்ந்து வாழ்வாரேயானால் மனுதாரர் மற்றும் அவரது குழந்தையின் உயிருக்கும் உடைமைக்கும் எவ்வித பாதுகாப்பும் இருக்காது என்ற சூழ்நிலையிலும் வேறு வழியின்றி இருப்பதாலும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே நடந்த திருமணத்தை ரத்து செய்யக்கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிர்மனுதாரருக்கு எதிருரை தாக்கல் செய்ய போதிய காலஅவகாசம் அளித்தும் தாக்கல் செய்யாத காரணத்தினால், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக ஆக்கப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

4. மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

5. மனுதாரர் கோரியுள்ளபடி 08.09.2019 ம் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்யும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதா என்பதே இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை.

6. மனுதாரர் தனது மனுவிலும் சாட்சியத்திலும் தனக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 08.09.2019 ம் தேதியன்று திருமணம்

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

நடைபெற்றதாக சொல்லியுள்ளார். மேற்படி தரப்பினர்களின் திருமண பத்திரிக்கை ம.சா.ஆ.2 ல் கடந்த 08.09.2019 ம் தேதி புதுக்கோட்டை அருள்மிகு பாலசுப்பிரமணியர் சுவாமி திருக்கோவிலில் வைத்து நடைபெற உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. எனவே மேற்படி தரப்பினர்களுக்குள் கடந்த 08.09.2019 ம் தேதி திருமணம் நடந்துள்ளது என்பதும் அவர்கள் கணவன் மனைவியாக வாழ்ந்துள்ளனர் என்பதும் தெரியவருகிறது.

மேலும் மனுதாரர் தனது சாட்சியத்தில் மனுதாரர் எதிர்மனுதாரரை மனைவி என்ற முறையில் சந்தோஷமாக வீட்டை விட்டு வெளியில் எங்கும் அழைத்துச் செல்லாமலும் ஒரு கைதியைப்போல வீட்டினுள் அடைத்து வைத்தும் சித்ரவதை செய்து வந்துள்ளார். எதிர்மனுதாரர் டிரைவராக பணிபுரிந்து வந்ததால் அவர் பணி நிமித்தமாக வெளியூருக்கு சென்றாலும் மனுதாரரை வீட்டில் வைத்து பூட்டி விட்டு செல்வதும் மேலும் மனுதாரரை ஒரே ஊரில் இருக்கும் அவரது தாயாரையோ, தாத்தா பாட்டியோ பார்ப்பதற்குக்கூட எதிர்மனுதாரர் அனுமதிக்காமலும் எதிர்மனுதாரர், மனுதாரரை வீட்டிற்குள்ளே வைத்து அடித்தும், கடித்தும், சிகரெட் சூடு வைத்தும் கொடுமைகள் செய்து வந்துள்ளார். எதிர்மனுதாரர் தன் வீட்டில் நடக்கும் கொடுமைகள் குறித்து மனுதாரரை அவரது அம்மா, தாத்தா, பாட்டியிடம் ஏதும் கூறக்கூடாது என்றும், அதனை மீறி கூறும் பட்சத்தில் தலையணையை வைத்து முகத்தில் அமுக்கி மனுதாரரை கொன்று விடுவதாக மனுதாரரை மிரட்டி வந்துள்ளார். எதிர்மனுதாரரின் இவ்வாறான செயல்கள் மனுதாரருக்கு உடல் ரீதியான மற்றும் மன ரீதியான கொடுமையாவே இருக்கும்.

மேலும் மனுதாரர் தனது சாட்சியத்தில் ம.சா.ஆ.3 எதிர்மனுதாரர் மனுதாரரை கொடுமைகள் செய்தது குறித்து மனுதாரரின் தாயார் சிவகாசி

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது புகார் செய்துள்ளார். எதிர்மனுதாரர் மிரட்டலுக்கு பயந்து மனுதாரர் காவல் நிலைய விசாரணையில் எதிர்மனுதாரர் தன்னை கொடுமை செய்யவில்லை என்றும் கூற வைத்ததாக மனுதாரர் கூறியுள்ளார். மேற்படி புகார் கொடுத்ததால் ஆத்திரம் அடைந்த எதிர்மனுதாரர் ம.சா.ஆ.4 மனுதாரர் அனுப்புவது போல் மனுதாரரின் பெயரை குறிப்பிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றினை மனுதாரரின் தாயாருக்கும், தாத்தா, பாட்டிக்கும் அனுப்பினார். அதில் பொய்யான சங்கதிகள் கூறி புகார் கொடுத்ததாகவும் அதனால் எதிர்மனுதாரர் வாழ்க்கையில் மனுதாரரின் தாயாரோ, தாத்தா, பாட்டியோ தலையிடக்கூடாது என்றும் ஷை அறிவிப்பு மனுதாரருக்கு தெரியாமல் எதிர்மனுதாரரால் அனுப்பப்பட்டதாக மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

மேலும் எதிர்மனுதாரர் ஒழுங்காக வேலைக்கு செல்லாமல் மனுதாரருக்கு பெற்றோர் அணிவித்த நகைகள் அனைத்தையும் மனுதாரிடம் இருந்து வலுக்கட்டாயமாக வாங்கி அடமானம் வைத்து குடித்து கும்மாளம் அடித்து செலவு செய்தும், மனுதாரர் நிறைமாத கர்ப்பிணியாக இருந்த நிலையில் எதிர்மனுதாரர், மனுதாரரிடம் சண்டையிட்டு மனுதாரரை அடித்து, வயிற்றில் உதைத்து, மனுதாரரின் தலைமுடியை பிடித்து கீழே தள்ளி பரபரவேன தரையில் இழுத்து சென்றுள்ளார். அருகில் இருந்தவர்கள் மனுதாரரை எதிர்மனுதாரிடம் இருந்து காப்பாற்றி காயமடைந்த மனுதாரரை சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனையில் சேர்க்க ஏற்பாடு செய்துள்ளார். எதிர்மனுதாரரின் இத்தகைய செயல்கள் எதிர்மனுதாரருடன் மனுதாரர் சேர்ந்து வாழ்வாரேயானால் மனுதாரர் மற்றும் அவரது குழந்தையின் உயிருக்கும்

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

உடைமைக்கும் எவ்வித பாதுகாப்பும் இருக்காது என்றும் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் இவ்வழக்கில் ஆஜராகி தனது தரப்பு வழக்கை எடுத்துரைக்க முன்வரவில்லை என்பதால் எதிர்மனுதாரருக்கு இவ்வழக்கில் எடுத்துரைக்கக்கூடிய வாதங்கள் இல்லை என்றே கருத வேண்டியுள்ளது.

7. மனுதாரர் இம்மனுவில் கண்டுள்ள சங்கதியினை ஒத்து வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் கொடுத்துள்ளார். மனுதாரர் அவரது தரப்பு வழக்கினை தகுந்த சாட்சியங்களின் அடிப்படையில் நிரூபணம் செய்துள்ள நிலையில் மனுதாரர் கோரும் பரிகாரம் மனுதாரருக்கு வழங்குவதற்கு போதுமான முகாந்திரம் உள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் எதிர்மனுதாரர், மனுதாரரை அவரது பெற்றோரை கூட சந்திக்க விடாமல் வீட்டிற்குள்ளே கைதியை போல் அடைத்து வைத்து கொடுமைப்படுத்தியும், அடித்து துன்புறுத்தியும் மனுதாரருக்கு மனதளவிலும் உடலளவிலும் கொடுமைகள் செய்து வந்துள்ளார். மேலும் மனுதாரர் நிறைமாத கர்ப்பிணியாக இருந்த நிலையில் எதிர்மனுதாரர், மனுதாரரிடம் சண்டையிட்டு மனுதாரரை அடித்து, வயிற்றில் உதைத்து, மனுதாரரின் தலைமுடியை பிடித்து கீழே தள்ளி பரபரவேன தரையில் இழுத்து சென்றுள்ளார். எதிர்மனுதாரரின் இத்தகைய செயல்கள் எதிர்மனுதாரருடன் மனுதாரர் சேர்ந்து வாழ்வாரேயானால் மனுதாரர் மற்றும் அவரது குழந்தையின் உயிருக்கும் உடைமைக்கும் எவ்வித பாதுகாப்பும் இல்லை என்றும் அவ்வாறு வாழ்ந்தாலும் அது இருதரப்பினருக்கும் பயன் அளிக்காது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 08.09.2019 ம் தேதியன்று நடந்த திருமணத்தை ரத்து

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

செய்து விவாகரத்து பரிகாரம் வழங்குவதுதான் நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

8. முடிவாக இந்த மனு அனுமதிக்கப்பட்டு மனுதாருக்கும், எதிர்மனுதாருக்கும் இடையே 08.09.2019ம் தேதியன்று நடைபெற்ற திருமணமானது இந்து திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் 1955 பிரிவு *13(1)(*i-a)ன் கீழ் ரத்து செய்யப்பட்டு விவாகரத்து வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2023ம் ஆண்டு ஏப்ரல் 13ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>

ம.சா.1 .. சுவாதி

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u>

ம.சா.ஆ.1 .. ஆதார் அடையாள அட்டை நகல்
ம.சா.ஆ.2 .. திருமண பத்திரிக்கை
ம.சா.ஆ.3 .. எதிர்மனுதாரர் மீது மனுதாரரின் தாயார் கொடுத்த புகார் மனு உண்மை நகல்
ம.சா.ஆ.4 .. மனுதாரர் அனுப்புவது போல் எதிர்மனுதாரர் மனுதாரரின் தாயார், தாத்தா, பாட்டிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

**சார்புநீதிமன்றம், விருதுநகர்.**

H.M.O.P. 51/2022

**சீரான/ வரைவு உத்தரவு**

நாள் 13.04.2023